## இலக்கணம் பயிற்சி- 01

பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. நாக்கின் நடுப்பகுதி விறைப்படைய உச்சரிக்கும் உயிர் எழுத்துகள்

1.அ,ஆ 2.இ,ஈ 3.உ,ஊ 4.எ,ஏ 5.ஒ,ஓ

2. வளைநா மருங்கொலியாக வருவன

1.ர்,ல் 2.ய், வ் 3.ள்,ழ் 4.ண்,ட் 5.ள், ட்

3. பகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1.திட்பம் 2.சம்பல் 3.கற்பு 4.பந்து 5.பாடம்

4. சொல்லின் முதலில் உகரம் வந்தால் சொல் இடையில் அதை அடுத்து வரும் உகரமும் இதழ் குவித்து முற்றியலுகரமாக ஒலிக்கப்படும் சொல்.

1.குறும்பு 2.கெடுதி 3.எழுது 4.மின்னு 5.அழு

5. 'காட்டிற்கு' என்பதில் வரும் சாரியை

1.இல் 2.இற் 3.இ 4.இன் 5.அன்

6. பின்வருவனவற்றில் கூட்டுப் பகுதியாக அமைவது

1.புத்திசாலி 2.கேள்விப்படுவாய் 3.தாய்மார் 4.மாடுகள் 5.வெட்கமான

7. தற்காலத்தில் மரியாதைப் பொருளில் ஒருமையில் மட்டும் வழங்கும் படர்க்கைப் பெயர்கள்

1.அவன்,இவன் 2.அவர்,இவன் 3.அவன்,இவர் 4.அவர்,உவர் 5.அவர்,இவர்

kalvi.lk

8. தற்காலத்தில் உயர் மரியாதைக்குரியோரைச் சுட்டும் முன்னிலைப் பெயராக அமையும் சொல்

1.தம் 2.தன் 3.நாங்கள் 4.நீங்கள் 5.தாங்கள்

9. புத்தகத்தில் காணாமல் போனவை எத்தனையோ? என்ற வினாப்பெயர் தரும் பொருள்

1.வியப்புப்பொருள் 2.கண்டனப்பொருள் 3.அழித்தற் பொருள் 4.நினைவுப்பொருள்
5.வியங்கோள் பொருள்

10. வினையும் விகுதியும் இணைந்த ஆக்கப்பெயராக வருவது

1.மேற்பார்வையாளன் 2.சமத்துவம் 3.கொடுமதி 4.அசட்டுத்தனம் 5.கடைக்காரி

11. வினையடியும் காலஇடைநிலையும் விகுதியும் சேர்ந்து வரும் தொழிற் பெயராக வருவது

1.உண்ணல் 2.ஓதல் 3.ஓடல் 4.ஊடல் 5.போவது

12.விளி வேற்றுமை ஏற்காத ஒரு சொல்

1.குழந்தை 2.நாரை 3.மக்கள் 4.மகன் 5.நீர்

13.பின்வருவனவற்றில் உருது மொழிச் சொல்லாக வருவது

1.அலாதி 2.ஒயில் 3.சொத்து 4.சாக்கு 5.கொச்சி

14.இறந்த கால தொழிற் பெயராக வருவது

1.நடப்பது 2.வருவன 3.நடவாமை 4.செய்யாமை 5.கூறியது

15.'பின்வாங்கு எழும்பு' என்பது எவ்வகை ஆகுபெயர்

1.தானியாகுபெயர் 2.,டவாகுபெயர் 3.கருவியாகுபெயர்
4.நீட்டலளவையாகு பெயர் 5.காரியாகு பெயர்

Education கல்வி අධ්‍යාපන

16. இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவாக வரும் குறிப்பு வினை

1.வந்தான் 2.அவன் 3.உண்டு 4.நீங்கள் 5.நாம்

17. ’பார்த்திலன்’- என்பதில் வரும் ‘இல்’ என்பது

1.இடைநிலை 2.குறிப்புப் பொருள் 3.எச்சம் 4.எதிர்மறை இடைநிலை 5.உடன்பாட்டு இடைநிலை

18. உடன்பாட்டு ஏவல் ஒருமையாக வருவது

1.உண்ணேல் 2.செய்யாதே 3.உண்ணீர் 4.உண்ணும் 5.நில்லாதே

19. ‘நீ எழுதியிருக்கின்றாய்’ என்பது உணர்த்தும் காலம்

1.தனி இறப்பு 2.நிகழ்வு நிறைவு 3.நிகழ்வுத் தொடர்ச்சி 4.தனி நிகழ்வு 5.எதிர்வுத் தொடர்ச்சி

20. காரண வினையாகவும் பிறவினையாகவும் வரத்தக்க வினை

1.உருட்டு 2.நடத்து 3.படிப்பி 4.நடப்பி 5.ஆட்டுவி

**தொகுப்பு : தேவா** **நன்றி :Kal-A/L Tamil**

Education கல்வி அடியாபன

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page